# முதல் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

## தமிழ்

வகுப்பு - நான்கு - ____________

நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** 10 × 1 = 10

1. 'அஞ்சுவது' என்ற சொல்லின் பொருள் ____________

   அ) சந்தோசம் ஆ) தூக்கம் இ) பயப்படுதல் ஈ) விளையாடுதல்

2. 'தொழில் + நுட்பம்' என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________

   அ) தொழில்நுட்பம் ஆ) தொல்நுட்பம் இ) தொலைநுட்பம் ஈ) தொழிநுட்பம்

3. 'அன்னை + தமிழே' என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ____________

   அ) அன்னைந்தமிழே ஆ) அன்னைத்தமிழே
   
   இ) அன்னத்தமிழே ஈ) அன்னைதமிழே

4. 'இணைந்து' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________

   அ) நடந்து ஆ) பிரிந்து இ) எழுந்து ஈ) பறந்து

5. 'பொங்கலிட்டு' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) பொங்கல் + இட்டு ஆ) பொங்கல் + லிட்டு
   
   இ) பொங்க + இட்டு ஈ) பொங் + கலிட்டு

6. 'மூர்க்கத்தனம்' - பொருள் தருக.

   அ) நட்பான ஆ) கடுங்கோபமான இ)அன்பான ஈ) பாசமான

7. அன்பரசன், தன் தாத்தாவுடன் சென்ற இடம் ____________

   அ) கடைத்தெரு ஆ) பக்கத்து ஊர் இ) பூங்கா ஈ) திருவிழா

8. 'கயம்' இச்சொல்லின் பொருள் ____________

   அ) நீர்நிலை ஆ) பயம் இ) வானிலை ஈ) பருவநிலை

9. 'ஈரக்காற்று' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) ஈர + காற்று ஆ) ஈ + ரக்காற்று இ) ஈரம் + காற்று ஈ) ஈரமான + காற்று

10. 'பேசி + இருந்தால்' என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________

    அ) பேசியிருந்தால் ஆ) பேசியிரு இ) பேசிஇருந்தால் ஈ) பேசவிருந்தால்

II. **சரியான தமிழாக்கத்துடன் பொருத்துக:** 5 × 1 = 5

| | | |
|---|---|---|
| 11. Talk less work more | - | நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது |
| 12. No pain No gain | - | மின்னுவதெல்லாம் பொன்னல்ல |
| 13. Good counsel has no price | - | குறைவாகப் பேசு அதிகம் வேலை செய் |
| 14. Haste makes waste | - | உழைப்பின்றி ஊதியமில்லை |
| 15. All that glitters is not gold | - | பதறாத காரியம் சிதறாது |

III. **கீழ்க்காணும் சொற்களை வகைப்படுத்துக:** 10

16. படித்தான், பறந்தன, எழுதினான், நாட்டிய மங்கை, அவள், மேய்ந்தன, வந்தது, ஓடினர், சென்றனர் வகுப்பறை

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |

IV. **எதிர்ச்சொல்லால் நிறைவு செய்க:** 5 × 1 = 5

17. மற்றவர் நம்மைப் புகழ்ந்தாலும் சரி ______________ சரி, நம் வேலையை நாம் சரியாக செய்ய வேண்டும்.
18. நிழலின் அருமை ______________ இருக்கும் போது தான் தெரியும்.
19. இளமையில் நாம் உழைத்தால் ______________ யில் ஓய்வெடுக்கலாம்.
20. ஒரு பொருளை ஆக்கல் மிகக் கடினம். ஆனால் ______________ மிக எளிது.
21. நாம் இருக்கும் இடத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர ______________ போட்டு கொண்டிருக்கக் கூடாது.

V. **வினாக்களுக்கு விடையளி:** 7 × 2 = 14


22. அன்பரசன் யாரிடம் ஆசி வாங்கினான்?
23. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
24. கரிகாலனின் இயற்பெயர் என்ன?
25. முயலின், கவலைக்குக் காரணம் என்ன?
26. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?
27. ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?
28. விசயநகரத்தை ஆட்சி செய்த புகழ்பெற்ற அரசர் யார்?
29. அழகிய மலைக்கிராமத்தின் பெயர் என்ன?

VI. **குறிப்புகளைக் கொண்டு விடைகளைக் கண்டறிக.** 6 × 1 = 6

30. காட்டின் ராஜா
31. தமிழ்மொழி வளர்ந்தது
32. நகைகள் செய்வது
34. பெண்கள் அணியும் கை
35. நெருப்பில் இருக்கும் கை
36. ஆதி மனிதன் வாழ்ந்த கை

VII. **சக்கரம் காட்டும் ஈரெழுத்து சொற்களை கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு விடை தருக:** 5 × 1 = 5

37. குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர் ______________
38. மழைக்கு மற்றொரு பெயர் ______________
39. தவறுக்கு எதிர்ப்பதம் ______________
40. வாய்விட்டு நீ ______________
41. நீர்நிலை பெயர் ______________




VIII. **ஓர் எழுத்தைச் சேர்த்து புதிய சொல்லை உருவாக்குக:** 5 × 1 = 5

42. தடை - ______________
43. பல் - ______________
44. குடை - ______________
45. சடை - ______________
46. காசி - ______________

.